**வானவில் கலையகம்**

உங்கள் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகள் எதுவானாலும் சிறந்த முறையில் அதி உயர் தொழில்நுட்பத்தில் வீடியோ படம் பிடித்திடவும் போட்டோ அல்பம் தயாரித்திடவும்

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் Internetமூலம் உங்கள் இல்ல நிகழ்வுகள் , ஆலய நிகழ்வுகள் எதுவானாலும் அதி உயர் தரத்தில் நேரடியாக (LIVE TLECAST) மூலம் பார்த்து மகிழ்ந்திடவும்

**தொடர்பு கொள்ளுங்கள்**

**வானவில் கலையகம்**

இல 330, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்தி)
யாழ்ப்பாணம்
0212229466 , 0772487550
www.vanavilstudio.com



10/=

பக்கங்கள் 06

# எதிரொலி

Ethiroli

குரல் 01 | அதிர்வு 75 | புதன்கிழமை ஜீலை 26 2017 | ethirolimedia@gmail.com | 021 300 48 48


# தடம்புரண்டது ஓட்டோ



பூநகரி – சங்குப்பிட்டிப் பாலத்தில் இன்று காலை 7.45 மணியளவில் ஓட்டோ ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இதன்போது ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரை தெரியவரவில்லை.

## நண்பனின் இறுதிக்கிரியையில் காயமடைந்த மெய்க்காவலர்!

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் மீது நல்லூரில் நடத்தப்பட்ட தாக்குதலின்போது, நீதிபதியைக் காக்கும் முயற்சியில் ஒரு மெய்க்காவலர் உயிரிழக்க, மற்றையவர் படுகாயமடைந்திருந்த நிலையில் யாழ்.போதனாவைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்தார்.

உயிரிழந்த மெய்க்காவலர் ஹேமச்சந்திரவின் இறுதிக்கிரியை சிலாபத்தில் இன்று நடைபெற்றது. தன் சக நண்பனின் இறுதிக்கிரியையில் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என காயமடைந்த மெய்க்காவலர் வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து, நீதிபதி இளஞ்செழியன் மற்றும் மருத்துவர்கள், பொலிஸார் ஆகியோரின் ஆலோசனைக்கமைய, உயிரிழந்த மெய்ப்பாதுகாவலரின் இறுதிக்கிரியைகளில் காயமடைந்த மற்றைய மெய்க்காவலர் கலந்துகொண்டார். (அ)

## ஒளிக்கும் அமைச்சர்



பிணை முறிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் முன்னாள் நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்க இன்று முன்னிலையாவதைத் தவிர்த்துள்ளார்.
எனினும் எதிர்வரும் ஓகஸ்ட் 2 ஆம் திகதி புதன் கிழமை ஆஜராகவுள்ளதாக தனது சட்டத்தரணிகள் மூலம் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.


பிணை முறிகள் தொடர்பில் தொடர்ச்சியான விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் ஏற்கனவே கடந்த

06

# அரசு அதிரடி

## எரிபொருள் நிலையங்களை

# கைப்பற்றியது இராணுவம்!



நாட்டில் உள்ள சகல எரிபொருள் நிலையங்களையும் இரவோடிரவாக இராணுவம் கைப்பற்றியதால் பெரும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தம் உட்பட பல விடயங்களை அடைப்படையாகக் கொண்டு பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பை முறியடிக்க அரசு , எரிபொருள் சேவையை

06

# அரசு சதி!



“பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதாகக் கூறி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பிற்போட அரசாங்கம் சதித்திட்டம் தீட்டிவருகின்றது” இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவருமான உதய கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

“இம்மாதம் 10ஆம் திகதி, வர்த்தமானி அறிவித்தலில் வெளியான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம், நாடாளுமன்றத்தில் இவ்வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன்மூலம், உள்ளூராட்சி மன்றங்களில்

06

## வருகிறீர்களா போகிறீர்களா? அரசு வைத்த ‘செக்’

எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவையாக நேற்றிரவு வர்த்தமானிப்படுத்தப்பட்டுள்ளதால், எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் சகல பணியாளர்களும் தங்களது பணிக்கு உடனடியாகத் திரும்புமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அத்தியாவசிய சேவை ஒன்று பிரகடனப்படுத்தப்படுமிடத்து, உரிய சேவை தொடர்பில் பணிக்கு திரும்பாதோர், பணியிலிருந்து தானாக நீங்கிச் சென்றதாகக் கருதப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கையை அரசாங்கம் வழமைக்கு கொண்டு வந்துள்ளதால், குறித்த சேவை மற்றும் நடவடிக்கையில்

06

## பெற்றோலுக்கு யாழில் ‘ரோக்கன்’




நாடளாவிய ரீதியில் பெற்றோலியப் பணியாளர்களின் பணிப்புறக் கணிப்பால் யாழ்ப்பாணத்திலும் எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் யாழ். மாவட்டத்தின் சில எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருக்கும் வாகனச் சாரதிகளுக்கு ‘ரோக்கன்’ வழங்கப்பட்டு எரிபொருள் கொடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், யாழ். நகர் மற்றும் அண்டியுள்ள பகுதிகளில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் “எரிபொருள் இல்லை” என எழுதிய பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (அ)

## வெள்ளியன்று பரீட்சைகள் நேரசூசியில் மாற்றமில்லை

“எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடாளவிய ரீதியில் சகல பாடசாலைகளிலும் கற்றல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, டெங்கு ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எனினும் வடமாகாணத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேரசூசியின் படி, இரண்டாம் தவணைப் பரீட்சைகள் அன்றைய தினம் நடைபெறும்” என வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார்.

பரீட்சைகள் நடைபெற்று முடிந்த பின்னர், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் வடமாகாணப் பாடசாலைகளில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஆ)

## சிறுப்பிட்டியில் விபத்து: மூதாட்டியின் கால் முறிவு

யாழ். சிறுப்பிட்டி, பருத்தித்துறை பிரதான வீதியில் இலங்கை வங்கிக்கு எதிரில் இன்று காலை 08.45 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ். புத்தூரிலிருந்து கோப்பாய் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் மேற்படி பகுதியிலுள்ள வீதியில் காணப்படும் பெரு வளைவையும் பொருட்படுத்தாமல் அதிவேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தியுள்ளனர்.

இதன்போது, வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியைக் கடக்க முற்பட்ட

06



# மகிந்த மனைவிக்கு நாளை விசாரணை

பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ச மற்றும் அவரது மகன் யோசித ராஜபக்ச ஆகியோரிடம் நாளை விசாரணை நடத்தப் படவுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளுக் காக ஷிராந்தி ராஜபக்ச மற்றும் யோசித ராஜபக்ச ஆகியோருக்கு, நாளை புலனாய் வுப் பிரிவில் முன்னிலையாகுமாறு அறி விக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலையில் ஷிராந்தி ராஜபக்ச வின் வாகனம் பயன்படுத்தப்பட்டமை தொடர்பிலேயே நாளைய விசாரணைகள் அமையும் என்று ஊகிக்கப்படுகின்றது.(ஆ)

# இலங்கை விமான சேவை முடங்கும் அபாயம்



இலங்கையிலிருந்து வெளிநாடுக ளுக்கான விமான சேவைகள் பாதிப்ப டையலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மூன்று கோரிக்கைகளை முன் வைத்து கனியவள ஊழியர்கள் தொடர்ந்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். எரிபொருள் விநியோகத்தை அத்தியாவசிய சேவை யாக அரசு அறிவித்த பின்னும் இந்தப் போராட்டம் தொடர்கிறது.

இதனால் இன்னும் சில தினங்கள் எரிபொருள் விநியோகத்தில் குழப்ப நிலையே நீடிக்கும்.

இந்த நிலையில் விமானங்களுக் கான எரிபொருள் வழங்கும் நடவடிக் கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலை நீடிக்கும் பட்சத் தில் விமான சேவைகள் முற்றாகத் தடைப் படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. (ஆ)

# சீனாவுக்கே அம்பாந்தோட்டை!



இலங்கைத் துறைமுக அதிகார சபைக் கும்,சீனாவின் மேர்ச்சன்ட் ஹோல்டிங் தனியார் நிறுவனத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ள உடன்படிக்கை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டுள்ளதாக துறைமுக மற்றும் கடல் நடவடிக்கை கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

"இது தொடர்பான விவாதம் நாளை மறு தினம் நடைபெறவுள்ளது. அதன் பின்னர் உடன் படிக்கையில் கைச்சாத் திடப்படும்" என்றும் அமைச்சர் கூறினார்.

" இலங்கையின் இரண்டு நிறுவனங்கள் ஊடாக இந்த முதலீட் டுத் திட்டம் முன் னெடுக்கப்படவுள் ளது. முதலீட்டின் பெறுமதி 1.12 பில்லி யன் டொலர் உடன்படிக் கைக் காலம் 99 வருடங் கள்" எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ)

# நபியை அவமதித்த கல்முனை இளைஞன் கைது!

முகமது நபியை அவமதித்தார் என்னும் குற்றச்சாட்டின் பேரில் கல்முனையில் தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று வைத்தியசாலையில் கடமையாற்றும் முரளி என்பவரே குறித்த மத அவமதிப்புக் குற்றச்சாட்டில் கைதான வராவார்.

தனது முகப்புத்தகத்தில், முஸ்லிம்களின் புனிதரான முகமது நபியை அவமதித்து கருத்துக்களை பதிவிட்டமை தொடர்பில் , அவருக்கு எதிராக குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் பொலிஸில் அளித்த முறைப்பாட்டையடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ)




# பாலியல் குற்றவாளி கைது!

18 சிறுமிகளை பாலியல் ரீதியாகத் துஷ் பிரயோகம் செய்த நபர் ஒருவரைக் கொஹூ வெல பொலிஸார் நேற்றுக் கைது செய்துள் ளனர்.

கொழும்புக்கு அருகாமையில் உள்ள சிறுவர் இல்லத்தின் பராமரிப்பாளராகக் கட மையாற்றி வரும் பெண் ஒருவரின் கணவரே சிறுமிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவராவார்.

குறித்த சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுமி கள் சர்வதேசப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருகின்றனர். சிறுமிகளைப் பாட சாலைக்கு அழைத்துச் செல்லும் வாக னத்தின் சாரதியாக சந்தேகநபர் கடமை யாற்றி வந்துள்ளார். இதன்போதே சிறுமி களை மிரட்டி அவர் தன் பாலியல் இச் சைக்கு அவர்களைப் பலியாக்கியுள்ளார்.

இந்தக் கொடூரத்துக்கு, சந்தேகநபரின் மனைவியும் உடந்தையாக இருந்தாரா என் பது குறித்தும் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (ஆ)

# மழைக்கு வாய்ப்பு



ஊவா, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான வாய்ப்பு அதிகமாகக் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் மத்திய, தென்,சப்ரகமுவ மற் றும் ஏனைய மாகாணங்களிலும் சிறியள வான மழை பெய்வதற்கான வாய்ப்புக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஆ)



# எருவுக்குள் முதிரை பளையில் மீட்பு

கிளிநொச்சி -பளை பகுதியில் பெறு மதி மிக்க முதிரை மரக் குற்றிகள் பொலி ஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

மல்லாவிப் பகுதியிலிருந்து எருவுக் குள் மறைத்து பார ஊர்தி ஒன்றில் கடத்த முற்பட்ட மரக் குற்றிகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி- முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபரின் விசேட குற்றத் தடுப்பு பிரிவுக்குக் கிடைத்த தகவலைய டுத்து, பளை, இத்தாவில் பகுதியில் வைத்து நேற்று இடம்பெற்ற சோதனை யின் போது இவை மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை பளைப் பொலி ஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஆ)

# மந்திகையில் கஞ்சா இளைஞர்!

வடமராட்சி - மந்திகைப் பகுதியில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் இன்று காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மந்திகைப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ் வாறு தனது உடைமையில் 100 கிராம் கஞ்சாவினை வைத்திருந்த குற்றச்சாட் டில் கைது செய்யப்பட்டார்.

மதுவரித் திணைக்கள அதிகாரிக ளுக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே குறித்த இளைஞன் மந்திகைப் பகுதியிலுள்ள கடை ஒன்றினுள் வைத் துக் கைது செய்யப்பட்டார் எனத் தெரி யவருகின்றது. (ஆ)

# போதைக்கு எதிராகப் பேரணி

போதைப்பொருள் பாவனையிலி ருந்து மக்களை விடுவிக்கும் நோக்கில் கியுடெக்-கரித்தாஸ் நிறுவனத்தினரால் விழிப்புணர்வு பேரணி ஒன்று கிளிநொச் சியில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தியிலி ருந்து ஏ-9 வீதி வழியாக முன்னெடுக் கப்பட்ட குறித்த பேரணி கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வரை சென்றது.

அதனைத் தொடர்ந்து மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாய கத்திடம் இது தொடர்பான மகஜர் ஒன் றும் கையளிக்கப்பட்டுள்ளது. (ஆ)



# இலங்கையில் எய்ட்ஸ் ஆண்களுக்கே அதிகம்




எச்.ஐ.வி. தொற்றால் இலங்கையில் ஆண்களே அதிகமாகப் பாதிப்புற்றுள் ளனர் என்று இலங்கை எய்ட்ஸ் தடுப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இந்த வருடத்தில் கடந்த ஆறு மாதங்களுக்குள் மட்டும் எச்.ஐ.வி பாதிப்பு ஏற்பட்ட 131 பேர் அடை யாளம் காணப்பட்டுள்ளனர். அதில் 90 பேர் ஆண்கள்.

பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பு கள் காரணமாகவே அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 0.0021 சதவீதம் பேர் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயினும் தெற் காசியாவில் மிகக் குறைவாக எய்ட்ஸ் பரவும் நாடாக இலங்கை அடையாளப் படுத்தப்பட்டுள்ளது என்று அந்தப் பணியகத்தின் பணிப்பாளர் டாக்டர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார். (ஆ)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848



# இளவரசி டயானாவுக்கு இத்தனை காதலர்களா?

பிரிட்டன் இளவரசி டயானாவின் காதலர்கள் யார், யார் என்ற பட்டியல் வெளியாகி, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
கடந்த 1997 ஒகஸ்ட் 31ஆம் திகதி கார் விபத்தில் சிக்கி இளவரசி டயானா மரணமடைந்தார். டயானா உயிரிழந்து 20 ஆண்டுகள் ஆகவுள்ள நிலையில் தனியார் தொலைக்காட்சி ஒன்று டயானா குறித்த ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளது. இந்தப் படத்திலேயே டயானாவின் காதலர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
டயானாவுக்கும் அவர் கணவர் சார்ள்ஸுக்கும் 1996ஆம் ஆண்டு விவாகரத்து ஏற்பட்டது.
சார்ள்ஸுடன் வாழும் போதும், விவாகரத்துக்குப் பின்னரும் டயானாவுக்கு பல ஆண்களுடன் தொடர்பு இருந்துள்ளது.
பிரபல இசைக் கலைஞர் ப்ரையன் அடம்ஸ், ரக்பி விளையாட்டு வீரர் வில் ஹார்லிங், குதிரைப்படை அதிகாரியான ஜேம்ஸ் ஹெவிட், ஒவியரான ஒலிவர் ஹோவர், கோடீஸ்வரர் டோடி பயட் ஆகியோர் டயானாவின் காதலர்களாக இருந்துள்ளனர். கடைசிக் காதலரான டோடி பயட்டுடன் காரில் செல்லும் போதே டயானா விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.(இ)

# 5 வயதுச் சிறுமியை மணம்முடித்தவர் கைது!



பாகிஸ்தானில் ஐந்து வயதுச் சிறுமியை 22 வயது இளைஞர் ஒருவர் திருமணம் செய்து கொண்டதால், பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.
பாகிஸ்தானில் உள்ள ராமென்ஷார் கிராமத்தில் 5 வயது சிறுமிக்கும், 22 வயது இளைஞருக்கும் திருமணம் நடைபெறவிருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் வந்துள்ளது.
இதையடுத்து பொலிஸார் திருமணம் நடைபெறும் இடத்துக்கு தாமதமாக சென்றுள்ளதால், அங்கு திருமணம் நடைபெற்று முடிந்துள்ளது.
இருப்பினும் 5 வயதுச் சிறுமியைத் திருமணம் செய்த குற்றத்துக்காக மணமகன் ஹபிபுல்லா ஷார், திருமணத்தைப் பதிவு செய்த பதிவாளர் மற்றும் மணமகனின் தந்தை ஆகியோரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
பாகிஸ்தானில் கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் 18 வயதுக்கு குறைந்தவர்கள் திருமணம் செய்து கொள்வதற்கு தடைவிதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
இதையும் மீறி மணமகன் 5 வயதுச் சிறுமியைத் திருமணம் செய்துள்ளதால், அதிகபட்சம் மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கவிழ்ந்தது படகு 10 பேர் உயிரிழப்பு



இந்தோனேசியாவில் உள்ள போர்னியோத் தீவில் வேகமாகச் சென்ற ஒரு படகு நேற்றுக் கவிழ்ந்தது. இந்தக் கோர விபத்தில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த விபத்து நடந்தபோது அந்தப் படகில் 40 பேர் பயணம் செய்ததாக தகவல்கள் கூறுகின்றன.
இதுபற்றி தேடல் மற்றும் மீட்புக்குழு அதிகாரி ஒருவர் கூறுகையில், "அந்தப் படகில் 40 பேர் பயணம் செய்திருக்கலாம் என்பது தற்போது எங்களின் நம்பிக்கை. காணாமல் போனவர்கள் என்று குடும்பங்களால் கூறப்பட்டிருப்பவர்கள் மீட்கப்படுவதற்காக காத்திருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்.
இந்தோனேசியா - மலேசியா இடையேயான நீர் வழிப்போக்குவரத்தில் அடிக்கடி படகு விபத்துக்கள் நேரிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கடற்பாறையில் மோதி ஒரு படகு விபத்துக்குள்ளானதில் 50 க்கும் மேற்பட்டவர்கள் பலியானமை நினைவுகூரத்தக்கது. (இ)

# குண்டுப் பெண்களில் அமெரிக்கா முதலிடம்

உலகில் உடற்பருமனாக உள்ள பெண்கள் அதிகமாக வாழும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடமும், பிரிட்டன் இரண்டாவது இடமும் பிடித்துள்ளன.
குண்டான பெண்கள் அதிகமாக உள்ள நாடுகள் குறித்த ஆய்வு ஒன்றை தனியார் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதன் போதே மேற்படி முதல் இடத்தை அமெரிக்கா பிடித்துள்ளமை தெரியவந்தது.
இந்தப் பட்டியலில் முதல் இரண்டு இடங்களைப்பிடித்துள்ள அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகளில் வாழும் பெரும்பாலான பெண்கள் தாம் அதிக உடற்பருமனாக இருப்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். (இ)



# கவலையில்லை

அமெரிக்கர்கள் வடகொரியாவுக்கு வருவதற்கு அந்த நாடு விதித்துள்ள தடை குறித்து எங்களுக்கு கவலை இல்லை என்று வடகொரியா தெரிவித்துள்ளது.
இந்தத் தடை குறித்து வடகொரியா கூறும்போது, "அமெரிக்காவின் இந்தத் தடையால் வடகொரியாவின் சுற்றுலாத் துறைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. அமெரிக்காவின் தடை குறித்து எங்களுக்கு துளியும் கவலையும் இல்லை" என்று கூறியுள்ளது. (இ)

# குஜராத்தில் வெள்ளம் பறந்தபடி பார்த்த மோடி

குஜராத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஹெலிகொப்டரில் பறந்து பார்வையிட்டார்.
பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க 500 கோடி ரூபாவையும் வழங்கினார்.
குஜராத் மாநிலத்தில் கடந்த சில நாட்களாகக் கனமழை பெய்து வருகிறது. இதனால், பனாஸ் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அந்த ஆறு ஓடும் பனாஸ்கந்தா, பதான் ஆகிய மாவட்டங்கள், வெள்ளத்தின் பிடியில் சிக்கி உள்ளன.
இதையடுத்து, இராணுவம், விமானப் படை, தேசிய பேரிடர் மீட்புப்படை ஆகியவை மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 4 விமானப்படை ஹெலிகொப்டர்கள், வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பதற்கும், உணவுப் பொதிகள் போடுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர, படகுகள் மூலமும் பொதுமக்கள் மீட்கப்பட்டு வருகிறார்கள்.
இதற்கிடையே, புதிய ஜனாதிபதியின் பதவி ஏற்பு விழாவில் பங்கேற்க டெல்லிக்குச் சென்ற குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானி, அங்கு பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து வெள்ள நிலைவரத்தை எடுத்துக்கூறினார். அதைத் தொடர்ந்தே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டார் மோடி. (இ)

# வாழ்வை அழித்த குரங்குச் செல்ஃபி



"ஒரு குரங்கின் செல்ஃபி புகைப்படம் என் வாழ்க்கையையே அழித்துவிட்டது" என்று பிரபல வனவிலங்குப் புகைப்பட கலைஞர் டேவிட் ஸ்லேட்டர் கூறியுள்ளார்.
கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தோனேசிய ஜாவாக் காடுகளில் டேவிட் ஸ்லேட்டரின் கமெராவால் எடுக்கப்பட்ட கருங்குரங்கு ஒன்றின் செல்ஃபி புகைப்படம் உலக அளவில் மிகப் பிரபலமானது. டேவிட் ஸ்லேட்டர் எடுத்த அந்தக் குரங்கின் செல்ஃபி புகைப்படம் சுமார் 5 கோடிக்கும் அதிகமானோரால் பகிரப்பட்டது.
குரங்கின் இந்த செல்ஃபி புகைப்படம் டேவிட்டுக்கு எந்த அளவு புகழைத் தேடித் தந்ததோ அந்த அளவுக்கு அவரின் வாழ்க்கையையும் தலைகீழாக புரட்டி போட்டுள்ளது.
டேவிட்டின் அந்தக் குரங்கின் செல்ஃபி புகைப்படங்களை விக்கிமீடியா தனது பொதுத் தளத்தில் வெளியிட்டது. தன்னுடைய அனுமதி இல்லாமல் தனக்குச் சொந்தமான புகைப்படத்தை பொதுவெளியில் விக்கிமீடியா வெளியிட்டது தவறு என்றும், அதனால் அப்படத்தை நீக்க வேண்டும் என்றும் டேவிட் வழக்குத் தொடுத்தார்.
ஆனால் விக்கிமீடியாவோ 'இந்தப் புகைப்படம் குரங்கு எடுத்தது. அதனால் டேவிட்டுக்கு அதன் காப்புரிமை சாராது. எங்கள் தளத்தில் அந்தப் புகைப்படத்தை வெளியிட்டதில் எந்தத் தவறும் இல்லை' என்றது. இந்த வழக்கு இன்னும் முடியவில்லை. ஆனால் வழக்குச் செலவுக்காக தன் சொத்துக்கள் அனைத்தையும் செலவிட்ட, டேவிட் ஸ்லேட்டர் இப்போது நடுத்தெருவில் நிற்கிறார். அவருடைய கமெராவைக் கூட திருத்த கையில் பணமில்லாத நிலைக்குச் சென்றுள்ளதாக அவர் வேதனையோடு தெரிவித்தார். (இ)

# நவஜீவன்ஸ், ஆதிசக்தி வெற்றி

திக்கம் மத்திய சனசமூக நிலைய வைர விழாவையொட்டி நடத்தப்படும் உதைபந்தாட்டத் தொடரின் இரண்டாம் நாள் ஆட்டங்களில் நவஜீவன்ஸ் மற்றும் ஆதிசக்தி விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்றன.

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு உதைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று இரவு இரு ஆட்டங்கள் நடைபெற்றன.

முதலாவது ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகம், 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ஐ)

# அரையிறுதியில் ஆவரங்கால் மத்தி



கைதடி சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் முன்னேறியுள்ளது.

நேற்று இரவு நடைபெற்ற ‘ஏ’ பிரிவினருக்கான காலிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் முதல் சுற்றை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் 25:22 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிகொள்ள, இரண்டாவது சுற்றை புத்தூர் வளர்மதி 25:19 என்ற புள்ளிக் கணக்கில் தனதாக்கியது.

பின்னர் வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது சுற்றில் 25:15 என்ற புள்ளிக் கணக்கில் மத்தி வெற்றிபெற்றது.

இதன் மூலம் 2:1 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றிபெற்ற மத்திய விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்கு முன்னேறியது.

அரையிறுதியில், அச்சுவேலி யூத் மற்றும் கொடிகாமம் கஜபாகு இராணுவ அணிகளுக்கிடையில் இன்று இரவு நடைபெறும் போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் மத்திய விளையாட்டுக்கழகம் மோதும். (ஐ)



# முதலிடத்துக்கு ஆப்பு வைக்குமா இலங்கை?

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் இன்று காலியில் ஆரம்பித்துள்ள டெஸ்ட் தொடரின் வெற்றி தோல்விகள் இரு அணிகளுக்குமான தரவரிசையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் படி முதலிடத்திலிருக்கும் இந்திய அணி முதலிடத்தை இழக்கும் வாய்ப்புக் கூட உள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) டெஸ்ட் அணிகளின் தரவரிசையில் இந்தியா 123 புள்ளிகளுடன் முதலிடத்திலும், தென்னாபிரிக்கா 117 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் உள்ளன. இலங்கை 92 புள்ளிகளுடன் 7ஆவது இடம் வகிக்கிறது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி 3-0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றினால் புள்ளி எண்ணிக்கை 125 ஆக உயரும். 2-0 என்ற கணக்கில் வசப்படுத்தினால் மாற்றமின்றி 123 புள்ளிகளிலேயே நீடிக்கும். 1-0 என்ற கணக்கில் வென்றால் ஒரு புள்ளியை இழக்க வேண்டியிருக்கும். 1-1 என்று தொடர் சமனில் முடிந்தால் இந்தியாவின் புள்ளி 119 ஆகக் குறையும்.

அதே சமயம் 1-2 என்ற கணக்கில் இந்திய அணி தொடரை இழக்கும் பட்சத்தில் 116 புள்ளிகளுடன் 2ஆவது இடத்துக்கு இறங்கும். 0-3 என்ற கணக்கில் தொடரை பறிகொடுத்தால் 114 புள்ளிகளாகச் சரிவடையும். அவ்வாறு நிகழ்ந்தால் இலங்கை அணி முன்னேறி 3ஆவது இடத்தை எட்டிப்பிடிக்கும். இலங்கை அணி 2-0 என்ற கணக்கில் தொடரை வென்றால் 4ஆவது இடத்துக்கும், 1-0 என்ற கணக்கில் வெற்றி கண்டால் 5ஆவது இடத்துக்கும் முன்னேறலாம். (ஐ)

# அதைச் சொல்ல கமலுக்கு உரிமை உண்டு



“ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக கருத்துச் சொல்ல கமலுக்கு உரிமை உண்டு” என்று நடிகை கவுதமி கருத்துத் தெரிவித்துள்ளார்.

நடிகர் கமல்ஹாசன் அனைத்துத் துறைகளிலும் ஊழல் மலிந்து விட்டது என்று கூறியது பற்றி நடிகை கவுதமி மேலும் கூறுகையில்,

“உலகத்தில் எல்லா விடயங்களிலும் இருக்கிற மாதிரி கண்டிப்பாக அரசியலிலும் இருக்கும்.

“அனைத்துத் துறைகளிலும் ஊழல் என்று கமல் கூறுவது அவருடைய கருத்து. அவருடைய கருத்தை வெளிப்படுத்துவதற்கு அவருக்கு மாத்திரமல்ல இந்திய நாட்டின் குடிமகனாக இருக்கும் எல்லோருக்கும் உரிமை இருக்கிறது.”

- இவ்வாறு நடிகை கவுதமி கூறினார்.

கமல் - கவுதமி இருவரும் ஒன்றாக இருந்து அண்மையில்தான் பிரிந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)




# காயத்ரி—ஓவியா சமாதானம்?

‘பிக்பாஸ்’ நிகழ்ச்சியில் நடிகை ஓவியா மற்றும் காயத்ரி ஆகியோர் எலியும்பூனையுமாக இருக்கின்றனர்.

ஜூலிக்கு ஆதரவாகப் பேசிவரும் காயத்ரி, எப்போதும் ஓவியாவை வசைபாடிக் கொண்டேயிருப்பார்.

இந்நிலையில் அவர்கள் இருவரையும் அழைத்து ‘பிக் பாஸ்’ ஒரு டாஸ்க் கொடுத்தார். அதைச் செய்வதற்காக இருவரும் பேசும்போது ஓவியா கண்கலங்கினார். அதைப் பார்த்த காயத்ரி அவரைக் கட்டியணைத்து ஆறுதல் சொன்னார். இது இன்றைய நிகழ்ச்சிக்கான டீசரில் காட்டப்பட்டது. என்ன நடந்தது என்பது இரவுதான் தெரிய வரும். (ஒ)

# நீச்சலில் உலக சாதனை




ரஷ்யாவின் கஸன் பகுதியில் உலக சம்பியன்ஷிப் நீச்சல் போட்டி நடைபெற்றுவருகிறது. இதில் இங்கிலாந்தின் 22 வயதான அடம் பீட்டி, நேற்று நடைபெற்ற 50 மீற்றர் பிரீஸ்ட்ஸ்ட்ரோக் போட்டியில் போட்டித் தூரத்தை 26.10 விநாடிகளில் கடந்து உலக சாதனை படைத்துள்ளார்.


இரண்டு வருடங்களுக்கு முன்னர் 26.42 விநாடிகளில கடந்து சாதனை படைத்திருந்தார். தற்போது அந்தச் சாதனையை அவரே முறியடித்துள்ளார்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கமரூன் வான் டெர்பர்க் 0.44 விநாடிகள் வித்தியாசத்தில்தான் 2ஆவது இடம் பிடித்தார். இறுதிப் போட்டியில் பீட்டுக்கு இவர் கடும் போட்டியாகத்திகழ்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற 100 மீற்றர் பிரீஸ்ட்ஸ்ட் ரோக் பிரிவில் அடம் பீட்டி தங்கப் பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இயக்குநர் மரணம்



தென்னிந்திய சினிமாவின் பிரபல இயக்குநர் சிராஜ் என அழைக்கப்படும் சிராஜுதீன் மாரடைப்புக் காரணமாக நேற்று சென்னையில் மரணமடைந்தார்.

ராமராஜன் கதாநாயகனாக நடித்துள்ள ‘என்ன பெத்த ராஜா’, ‘தங்கத்தின் தங்கம்’, ‘ஊரெல்லாம் உன் பாட்டு’, ஆனந்தராஜ் நடித்த ‘என் ராஜாங்கம்’ ஆகிய படங்களை இயக்கியவர் இவர்.

இயக்குநர்கள் பலர் இணைந்து இயக்கிய ‘சுயம்வரம்’ படத்திலும் பணியாற்றியுள்ளார். அதேவேளை, பல படங்களுக்கு கதை, வசனமும் எழுதி இருக்கிறார்.

இவருக்கு ஆயிஷா என்ற மனைவியும், மன்சுரா, பானு என்ற மகள்களும் உள்ளனர். (ஒ)



# அமெரிக்கத் தேர்தலில் இலங்கைப் பெண்மணி

அமெரிக்காவின் முன்னாள் முதல் பெண்மணியான மிச்சேல் ஒபாமாவின், கொள்கைப் பணிப்பாளர்களில் ஒருவராக இருந்த இலங்கைத் தமிழ்ப் பெண்ணான,கிரிசாந்தி விக்னராஜா (வயது -37) மேரிலன்ட் மாநில ஆளுநர் பதவிக்குப் போட்டியிடவுள்ளார் என்று கூறப்படுகிறது. மேரிலன்ட் மாநில ஆளுநர் பதவிக்கான தேர்தலில் களமிறங்குவது பற்றி தாம் தீவிரமாக ஆலோசித்து வருவதாக, அமெரிக்க வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்ணான கிரிசாந்தி விக்னராஜா, வாசிங்டன் போஸ்ட் நாளிதழிடம் தெரிவித்துள்ளார். பலர் என்னைக் களமிறங்குமாறு ஊக்குவிக்கிறார்கள், இதுபற்றி நான் தீவிரமாக ஆலோசித்து வருகிறேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

# இன்றைய கருத்தோவியம்




# மகிந்தவின் கடனுக்கு 3.2 ட்ரில்லியன் நிதி

மகிந்த ராஜபக்ச அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்த 2019ஆம் ஆண்டு 3.2 ட்ரில்லியன் ரூபா தேவைப் படுவதாக நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
வெளிநாட்டுச் செலாவணி சட்டமூலம் தொடர்பான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் பதவியேற்ற பின்னர் பல்வேறு குப்பை மேடுகளைத் தனது தோள்களில் சுமக்கவேண்டி ஏற்பட்டது. சர்வதேச அரங்கிலிருந்து மனித உரிமைப் பிரச்சினை, பாரிய கடன் சுமை, ஊழல் மோசடி, குப்பைப் பிரச்சினை என பல்வேறு குப்பை மேடுகளை சுமக்கவேண்டிஏற்பட்டது. கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் எவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக் கப்படவில்லையென்ற குற்றச்சாட்டு காணப்படுகிறது. எனினும், ராஜபக்ச குடும்பத்தில் வீடு வாங்கியமை, கறுப்புப் பணப் புழக்கமென 3.1 பில்லியன் ரூபா பெறுமதியான மோசடி குறித்த தகவல்கள் நீதிமன்றத்துக்கு வழங்கப் பட்டு வழக்குகள் தொடுக்கப் பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# கால் மாற்று அறுவைச் சிகிச்சை தமிழ் வைத்தியர் சாதனை



இலங்கை வரலாற்றில், முதல் முறையாக, கால் மாற்று அறுவைச் சிகிச்சை ஒன்றைச் செய்து தமிழ் மருத்துவர் ஒருவர் தலைமையிலான மருத்துவக் குழுவினர் சாதனை படைத்துள்ளனர். அனுராதபுர மருத்துவமனையில் நேற்று முன்தினம் குறித்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மூளைச் சாவு அடைந்த ஒருவரின் காலை, அகற்றி, அங்கு சிகிச்சை பெற்று வந்த மற்றொருவருக்குப் பொருத்தி, இரத்தநாள மற்றும் மாற்று அறுவைச் சிகிச்சை நிபுணரான மருத்துவ கலாநிதி ஜோயல் அருட்செல்வம் தலைமையிலான மருத்துவர்கள் குழு இந்தச் சாதனையைப் படைத்துள்ளது. விபத்து ஒன்றில் ஒரு ஆண்டுக்கு முன்னர் முழங்காலுக்கு மேல் வரையான பகுதியை இழந்த 32 வயதுடைய இளைஞனுக்கே, இந்த கால் மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலகம் முழுவதிலும், இதுபோன்ற 10இற்கும் குறைவாக அறுவைச் சிகிச்சைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ)

# போதைத் தடுப்புக்கு தனிப் பணியகம்



நாட்டுக்குள் போதைப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகம் மற்றும் திட்டமிடப் பட்ட குற்றச் செயல்கள் தடுப்புப் பிரிவு ஆகிய வற்றை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரின் கீழ் தனியான பிரிவாக மறுசீரமைக் கப்படவுள்ளதாக சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார். இது தொடர்பில் நாளை சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற விருப்பதாகவும் அவர் கூறினார். (உ)

# நாடாளுமன்றில் மின்னணு வாக்கு

இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று முதல்முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தைப் பயன்படுத்தி வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.
வெளிநாட்டு நாணயப் பரிமாற்றச்சட்டம்நேற்று நாடாளுமன்றத்தில் திருத்தங்களுக்குப் பின்னர் நிறைவேற்றப்பட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் கொண்டு வரப்பட்ட இந்த சட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, 94 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 18 பேர் எதிராகவும் வாக்களித்தனர். இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முதல்முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரங்களைப்பயன் படுத்தி தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர். (உ)

# வெலிக்கடைப் படுகொலை நினைவுநாள்




வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 34ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள திலீபன் நினைவுத் தூபி முன்றலில் நடைபெற்றது. (உ)

# இலங்கை - இந்திய உடன்பாடே புலிகளைத் தோற்கடிக்க உதவியது



1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப் பட்ட இந்திய- இலங்கை சமாதான உடன்பாடே, வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோற்கடிக்க உதவியது என்று அமைச்சர் நவீன் திசநாயக்க தெரிவித்துள்ளார்.
"இந்திய- இலங்கை சமாதான உடன்பாடு கையெழுத்திடப்பட்ட போது, எனது தந்தையாரான காமினி திசநாயக்க ஐதேக அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தார். அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அந்த உடன்பாட்டை எதிர்த்தது. அந்த உடன்பாடு கைச்சாத்திடப்படாது போயிருந்தால், வேலுப்பிள்ளை பிரபாகரனைத் தோற்கடிக்க, இந்தியா ஆதரவு அளித்திருக்காது. 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர், பிரபாகரனைத் தோற்கடிப்பதற்கான இலங்கையின் நகர்வுகளுக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார். (எ)


## நாளை நாளும் கோளும்

27.07.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 11ஆம் நாள்
சதுர்த்தி பி.ப. 11.03 வரை | பூரம் மு.ப. 08.41 வரை | கருடபஞ்சமி
இராகுகாலம் 01.32-09.02 | சுபநேரம் 07.32-09.02 | எமகண்டம் 06.02-07.32

கொடியேற்றம்: நீர்வேலி வாய்க்கற்றவை பிள்ளையார், அச்சுவேலிப் பிள்ளையார், கோண்டாவில்-இணுவில் காரைக்கால் சிவன்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலாபம் | வீண்செலவு | நலம் | வெற்றி | ஒய்வு | ஆர்வம் | களிப்பு | சிக்கல் | பகை | சிந்தனை | நேர்மை | ஊக்கம் |

## அந்த நாள் ஞாபகம்.....!



### 1957.07.26

இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கும் இடையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 'பண்டா-செல்வா' ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது.

# வீட்டுத்திட்டம் வேண்டும்




வவுனியா தாலிக்குளம் பகுதியில் வசிக்கும் மக்கள், வீட்டுத்திட்டம் கோரி, பிள்ளையார் ஆலயம் முன்பாக இன்று காலை ஒரு மணிநேரம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

வவுனியா, பூவரசங்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள தாலிக் குளம் கிராமத்தில் கடந்த பத்து வருடங்களாக வசித்து வருகின்ற சுமார் முப்பது குடும்பங்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டம் வழங் கப்படவில்லை. இதன்காரணமாகவே அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத் தினை மேற்கொண்டனர்.

"போரினால் பாதிக்கப்பட்டு எமது உடைமைகள் அனைத்தையும் இழந்து , இங்கு குடியேறியிருந்த நிலையில் கூட, எமக்கு தற்போது வரை வீட்டுத்திட்டம் வழங்கப்பட வில்லை. எமது சொந்த நிலத்திலேயே அகதி போன்று வாழ வேண்டிய நிலையே தற்போது உள்ளது. அத்துடன் சமுர்த்திக் கொடுப்பனவுகளும் எமக்கு வழங்கப்படவில்லை. எமது கிராம வீதிகள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ளது. அத்துடன் குடிதண்ணீர்ப் பிரச்சினையையும் எதிர்நோக்கி வருகின்றோம்." என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.(ஆ)

# வடக்குக்கு வறட்சி நிவாரணம்

வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள வடமாகாண மக்களுக்கு தேவையான குடிதண்ணீரை வழங்குவதற்காக நீர்த்தாங்கிகள் மற்றும் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

இந்த உதவிகளுடன் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான ஏனைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் நாடாளுமன்றத்தில் நேற்றுக்குறிப்பிட்டார்.

"வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள வடமாகாண மக்களுக்கு மானியம் வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குடிதண்ணீரை விநியோகிப்பதற்கு 45 உழவு இயந்திரங்களும், பவுசர்களும் ,லொறி பவுசர்களும் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து பவுசர்களுக்கும் மேலதிகச் சாரதிகளை ஈடுபடுத்தி நீரை விநியோகிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்றார். (உ)

# சாவகச்சேரியில் இளைஞன் காயம்



சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு அருகாமையில் இன்று காலை 8 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார்.

முன்னால் சென்ற வாகனம் ஒன்றை பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மீசாலை தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 26 வயதான தங்கராசா அனுசன் என்ற இளைஞனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.(ஆ)

## சிங்கக் கொடியை அவமதித்தவர் கைது

இலங்கையின் தேசியக் கொடியை கலால் மிதித்து அவமதித்த நபர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்னால் பறக்க விடப் பட்டிருந்தது. மோட்டார் சைக்கிள் ஒன்றில் நேற்று வந்த நபர் ஒருவர் அந்தக் கொடியை அகற்றி தன் காலில்போட்டு மிதித்தார். பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றார். இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட வவுனியாப் பொலிஸார் நேற்று மாலை அவரைக் கைது செய்தனர். பின்பு அவர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். (இ)

## வந்து சேர்ந்தன பெற்றோல் பவுசர்கள்




எரிபொருள் கூட்டுத்தாபன ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் யாழ். குடாநாட்டில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு நிலவியது. இந்த நிலையில் இன்று மதியத்திலிருந்து பவுசர்கள் மூலம் எரிபொருள் நிலையங்களுக்கு பெற்றோல் வந்து சேரத்தொடங்கியுள்ளது.

**தொடர்ச்சிகள்**

### சிறுப்பிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதியைச் சேர்ந்த மூதாட்டியைப் பலமாக மோதித்தள்ளியது.

சம்பவத்தில் மூதாட்டியின் கால் முறிவடைந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞனும் படுகாயங்களுக்குள்ளாகினர்.உடனடியாக இருவரையும் மீட்ட அப்பகுதி பொதுமக்கள் சிகிச்சைகளுக்காகக் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (அ)

### வருகிறீர்களா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடும் பவுசர்களை, உரிய எரிபொருள் களஞ்சியங்களுக்கு சமுகமளிக்குமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அத்துடன், பணியில் ஈடுபடாத தனியார் பவுசர்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### அரசு சதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண் பிரதிநிதித்துவத்தை 30 சதவீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு நாம் பூரண ஆதரவை வழங்குகின்றோம்.

உள்ளூராட்சி மன்றங்களில் பெண் பிரதிநிதித்துவத்தை 30 சதவீதமாக அல்ல 50 சதவீதமாக உயர்த்தினாலும், அதனை நாம் வரவேற்போம். எனினும், பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதாகக் கூறி, உள்ளூராட்சிமன்றத் தேர்தலை அரசாங்கம் பிற்போட சதி செய்கிறதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது" என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

### ஒளிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்க்கிழமை அமைச்சர் கருணாநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும் நாடாளுமன்ற அமர்வு மற்றும் அமைச்சரவை அமர்வு என்பன வற்றில் அன்றையதினம் கலந்து கொள்ளவேண்டியுள்ளதால் கடந்த செவ்வாய்க்கிழமையும் ஆணைக்குழுவுக்கு வராமல் ரவி கருணாநாயக்க தவிர்த்திருந்தார். இதனால் இன்று ஆஜராகுமாறு அவருக்கு அறிவிக்கப் பட்டிருந்தது. இருப்பினும் இன்றும் ஆணைக்குழுவுக்கு வராமல் அவர் பின்னடித்துள்ளமை பலருக்கும் சந்தேகத்தை எழுப்பியுள்ளது. (அ)

### கைப்பற்றியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாவசிய சேவையாக வர்த்தமானி அறிவிப்பை நேற்று நள்ளிரவு விடுத்தது. இதனையடுத்து நாட்டில் உள்ள எரிபொருள் நிலையங்கள், களஞ்சியங்கள், குதங்கள் என்பவற்றை இராணுவத்தினர் இரவோடிரவாகக் கைப்பற்றி, தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.அத்துடன் குறித்த இடங்களில் இருந்த பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் அனைவரும் அங்கிருந்து ஆயுதமுனையில் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். கொலன்னாவ, சபுகஸ்கந்த, திருகோணமலை ஆகிய எண்ணெய்க் குதங்கள் தற்போது இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலிய ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் நாட்டில் உள்ள தொழிற்சாலைகள், போக்குவரத்து என்பன ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்பட்டதை அடுத்தே அரசு அதிரடியாக இராணுவத்தைக் களத்தில் இறக்கியுள்ளது. இராணுவத்தினர் மூலம் திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களில் இருந்து எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் இன்னும் ஓரிரு தினங்களில் எரிபொருள் விநியோகம் சீரடையும் என அரசு அறிவித்துள்ளது. (அ)




இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 26.07.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.